உண்மைதான். விஸ்கோஸ் போனஸ் பிரச்சினைக்கு எப்படியாவது தீர்வுகாண வேண்டும் என்று நானே இரண்டு முறை பேசியிருக்கிறேன். அதிலே நல்ல சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டு தொழிலாளர்கள் எல்லோரும் வேலைக்குத் திரும்ப வேண்டுமென்று எல்லோரும் விரும்புவோமாக.

(5) அரசினர் சட்ட முன்வடிவு.

பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ''1983 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.''

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, நான் இந்த மசோதா அறிமுகம் செய்வதை எதிர்க்கிறேன். காரணம் இந்த மசோதா ஏற்கனவே இந்த மன்றத்தில் வந்து பச்சையப்பனுடைய அறநிலையத்தைப் பாதுகாப்பதற்கு என்று, இருந்த டிரஸ்ட்போர்டு கலைக்கப்பட்டு, அந்தச் சொத்துக்களை எல்லாம், மற்ற நிர்வாகத்தையும் பாதுகாக்கிறோம என்று சொல்லி, அதற்காக அரசாங்கமே மேற்கொண்டு ஒரு குழுவை போட்டது. அப்போதும் நாங்கள் எதிர்த்தோம். அப்போது நம்முடைய மந்திரி அவர்கள் சொன்னார்கள். பச்சையப்பன் கட்டிவைத்த நிறுவனம் பாழாகப் போய்விடும் போல் இருக்கிறது ஆகவே அரசாங்க அதிகாரிகள் போட்டு அதைக் கட்டிக் காத்து விடுகிறேன். அதற்கு 2 வருடம் போதும், மேற்கொண்டு போகாது, நிச்சயமாகச் சொல்கிறேன் என்று அப்போது சொன்னார். இப்போது என்ன சொல்லுகிறீர்கள். வழக்கமாக என்ன செய்வீர்களோ அதே மாதிரி, மேலும் ஓராண்டு நீட்டிப்பு என்று சொல்லுகிறீர்கள்.

இப்போது என்ன நிலைமை என்று கேட்டால் இந்தப் பொறுக்குக் குழுவிற்கு போட்டிருக்கிறார்கள் பாருங்கள், அவர்கள் செய்த தப்பைக் கண்டுபிடிப்பதற்கு இதற்கு ஒரு பொறுக்குக் குழுவைப் போட்டு அதற்கு ஒரு 5 ஆண்டு காலம் கொடுக்கவேண்டும் என்று சொல்லுகிற நிலை இருக்கிறது. என்ன சீர்திருத்தி இருக்கிறீர்கள் ஒரே ஒரு சீர்திருத்தம் செய்திருக்கிறீர்கள். கம்பீரமாக பூந்தமல்லி நெடுஞ்சாலையிலே இருந்த அந்தக் கல்லூரியின் கேட்டை அடைத்து, அதாவது பெரியகேட்டை மூடி, சின்னகேட்டைப் போட்டு, ஜெயில் கேட்டு மாதிரி வைத்திருக்கிறீர்கள். மகத்தான சாதனை.

இந்தக் குழு இன்னொன்றையும் செய்திருக்கிறார்கள், என்ன அது? இந்த இரண்டு வருடம் யார் யார் அந்தக் குழுவிலே இருந்தார்களோ அதிலே இரண்டு பேர்கள் வேண்டாதவர்களைத் தூக்கி எறிந்துவிட்டு, வேண்டியவர்கள் 2 பேர்களைப் போட்டு விட்டார்கள். அந்தக் குழு செய்த மகத்தானத் திருப்பணி குழு உறுப்பினர் போய் புதிய உறுப்பினர்கள் வந்ததுதான். முதுகு வலிபோய் திருகு வலி வந்த கதையைப் போலத்தான் இருக்கிறதே தவிர, நிர்வாகத்தை சீர்திருத்துகிற, புனிதப் படுத்துகிற, செப்பனிடுகிற பணியாக இல்லை.... (மணி அடிக்கப்பட்டது).

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவர் அவர்களே, இப்போது அந்தக் கல்லூரிகள் ஒழுங்காக நடந்து கொண்டிருக்கின்றன. எடுக்கப்பட்ட நடவடிக்கை சரியாக அமைந்து இருக்கிற காரணத்தால் நல்ல முறையில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பொறுப்புக் குழுவினுடைய வருமானம் உயர்ந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியபோது அந்தப் பொறுப்புக் குழு போட்டதால் ஏதோ தவறு நடைபெற்றிருக்குமோ என்ற அடிப்படையில் பிரச்சினையைப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். எதுவும் நடைபெறவில்லை. நல்ல முறையிலே நடந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அதற்காக அச்சப்படத் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி. ''1983 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS